தினமலர்

**March 11, 2018**

# ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி 71வது ஆண்டு விழா




ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரி ஆண்டு விழாவில் நடந்த கலை நிகழ்ச்சியில் பங்கேற்ற மாணவியர். இடம்: தேனாம்பேட்டை, சென்னை.

**சென்னை, மார்ச் 11–**

சென்னை, தேனாம் பேட்டையில் உள்ள ஸ்டெல்லா மேரிஸ் கல்லூரியின், 71வது ஆண்டு விழா, கல்லூரி வளாகத்தில் நேற்று நடந்தது.

விழாவில், கல்லூரி முதல்வர், ஜெசிந்தா கோட்ராசிட் வரவேற்றார்.

கல்லூரி தேர்வு மற்றும் விளையாட்டு போட்டிகளில், அதிக மதிப்பெண் பெற்ற மாணவியருக்கு, உயர் கல்வி துறை செயலர் சுனில் பாலிவால் சான்றிதழ் மற்றும் கோப்பைகளை வழங்கினார்.

விழாவில் அவர் பேசியதாவது:

அழகான, அறிவான, துடிப்பான மகளிர் மத்தியில் பேசுவதில், எனக்கு மகிழ்ச்சி. என் மனைவி, சென்னையில் உள்ள தனியார் பள்ளியில்; பேராசிரியராக பணி புரிகிறார்.

அவர், உங்களை போன்ற துடிப்பான இளம் வயதினருடன், தினமும் இருப்பதால், சுறுசுறுப்புடன், இளமையாக காட்சியளிக்கிறார்.

எனக்கு, அரசு அலுவலக பணி என்பதால், வயது முதிர்ந்த உணர்வுடன் இருக்கிறேன். நம்மை சுற்றி இளைஞர்கள் அதிகம் இருந்தாலே, நாமும் எப்போது இளமையாகவே இருப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

தொடர்ந்து, கல்லூரி மாணவியரின் பாட்டும், நடன நிகழ்ச்சியும் நடந்தது.

விழாவில், கல்லூரி மாணவர் அணி தலைவர் ஷெலின் நன்றி கூறினார்.

DECCAN Chronicle

**March 11, 2018**

## IN SYNC




Students of Stella Maris College for women perform during the College Day celebrations on Saturday. —DC